


– வாழ்வோம்

புதையல் 8

தமிழ்-தமிழர், தமிழ்நாட்டிற்காகவும் குரல்கொடுத்த திராவிட இயக்க இதழ்களில் வெளியான, பல்வேறு காலங்களையும் தாண்டி நிலைத்து நிற்கும் சிறப்புமிக்க எழுத்துகளில் இருந்து சில பகுதிகள்...


சாதி ஒழிந்தால்.....!

ஒளிந்துள்ள சாதியை ஒழிப்போம்!

சாதி ஒழிந்தால், சோஷலிசம் மட்டுமா வரும்? எத்தனையோ எண்ணற்ற நன்மைகளை நாம் பெறமுடியும். எனவே, ஒளிந்துள்ள சாதியை ஒழிப்போமாக!

'சாதியை ஒழித்துவிட்டோம்; இந்த நாட்டில் அதற்கு இனி இடம் இல்லை; அதைக் குழிதோண்டிப் புதைத்தாகிவிட்டது' என்று சொல்கின்ற வர்கள் உள்ளனர்; நம்புகின்றவர்களும் உள்ளனர். அது உண்மையான கூற்றுதானா என்றால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். மேற்போக்காகப் பார்க்கின்றபோது, சாதி இல்லையோ என்று எண்ணத் தோன்றும்; சாதிச் சனியனை ஒழித்து விட்டதாக எண்ணி மகிழலாம். ஆனால், அந்தச் 'சனியன்' அவ்வளவு எளிதில் போகக்காணோம். அதன் ஆட்சி இன்னும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. வீட்டில், உள் அறையில் இருந்த சாதி, இப்போது உள் அறையை விட்டு, வீட்டைக் கடந்து வெளிவந்து உலாவத் தொடங்கிவிட்டது. 'என்ன சாதி?' என்று ஒருவனைப் பார்த்து கேட்கத் தயக்கம் நீங்கி, வெளிப்படை யாகக் கேட்டு அறியத் துடிக்கும் துணிவு காணப்படுகின்றது. நம் சாதி என்று சில பேர் மீது ஆசையும் பற்றும் வளரும் நிலை ஏற்படு கின்றது. நம்மவன் அல்லன் என்பதால் சில பேரைப் புறக் கணிக்கவும் மனம் எண்ணு கின்றது. இந்த நிலை நாட்டினை எங்கு கொண்டுபோய் நிறுத்தும் என்பதை அளவிட்டுக் கூற இயலாது. சொல் லொணாத் துயரங்கள், தொல்லைகள் சாதியால் விளைந்துள்ளன. நமது நாடு உண்மையான உயர்வைக் காணவேண்டு மாயின், முதலாவதாகவும் முக்கியமாகவும் செய்யப்படவேண்டிய மாற்றமும் திருத்தமும் சாதி ஒழிப்புதான் என்பதை நமது இலட்சியமாகக் கொண்டுள்ளோம்.

சாதியற்ற சமுதாயத்திலேதான் – உண்மையான சமத்துவம் என்ற அடித்தளத்தின் மீதுதான் நமது சமதர்மம் அல்லது பொதுவுடமை என்ற பூங்கா ஏற்படும். எனவே, சாதி ஒழிப்பது எத்தனை முக்கியமானது என்பது விளங்கும். ஆனால், நம்முடைய நாட்டில் பலருக்கு இந்த நிலை தெரியாததினால், சாதியைப் பற்றி அதிகமான அக்கறை காட்டாமல் விட்டுவிட்டு, அது தானாக ஒழியும் என்று எண்ணினர். அது அப்படி ஒழியவில்லை. சட்டம் என்ற தடிகொண்டு அடித்தபோதும் அது ஒழியவில்லை.

சாதியின் முற்றிய நிலையில் உள்ள நோயே தீண்டாமை என்பது. சாதி போய்விட்டது என்று தவறாக எண்ணு வதைப்போலவே, தீண்டாமையும் ஒழிந்துவிட்டது என்று பலர் பேசினர். ஆனால் உண்மை நிலை, அது ஒழிய வில்லை என்பதை எடுத்துக்காட்டுகின்றது. 'ஆதி-திராவிடர்' என்ற பெயர் மாறி, 'அரிசனம்' என்ற பெயர் கிடைத்த தேயன்றிப் பெருமை ஒன்றும் கிட்ட வில்லை. அதே சேரி, அதே ஏழ்மை, அதே புறக்கணிப்பு அதே இழிநிலைதான் இன்னும் இருந்திடுகிறது. இதனை எண்ணி எண்ணி மனம் புழுங்கி, அமைச்சர் ஜகஜீவன்ராம் அவர்கள் வருந்தினார்; வருத்தத்தைச் சில விடங்களில் சொல்லியுழுதார். உடனே பலர் – குறிப்பாகத் தேசிய ஏடுகள் – அவர்மீது பாய்ந்துவிழுந்தன. அந்தப் பாய்ச்சலினால் உள்ளதை மறைத்துவிட இயலாது அல்லவா?


அதே போல 'சாதி ஒழிந்து விட்டது' என்று பறைசாற்ற முனைவோர்க்கும் ஓர் அடி அண்மையில் கிடைத்திருக்கிறது. "சாதிமுறை ஒழிந்தாலொழிய, சோஷலிசம் வரமுடியாது... நாம் சாதி வலையில் சிக்கிக்கொண்டிருக்கிறோம். சாதி அரசியலும் புகுந்துவிட்டிருக்கிறது" என்று நேரு பண்டிதர் குறிப்பிட்டிருக் கிறார். ஒழிந்துவிட்ட சாதி இங்கே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை நிலை. சாதி இந்த நாட்டை விட்டு அகலவில்லை. அதற்காக உண்மையான முயற்சிகள் செய்யப் பட்டால், நிச்சயம் அது ஒழியும். இந்தப் பிரச்சினையின் அடிப்படையை ஆராய்ந்து முனைகின்றவர்கள் தொகை வளர வளர – கழகத்தின் இலட்சி யங்களில் ஒன்றான சாதி ஒழிப்பு முறை உண்மையானதுதான் என்ற எண்ணம் எல்லோருக்கும் ஏற்படும் போது தானாகவே – சாதி ஒழியும். ஆனால், அதுவரை ஒளியும்; பதுங்கும்.

சாதி ஒழிந்தால், சோஷலிசம் மட்டுமா வரும்? எத்தனையோ எண்ணற்ற நன்மைகளை நாம் பெறமுடியும். எனவே, ஒளிந்துள்ள சாதியை ஒழிப்போமாக!

('திராவிட நாடு' தலையங்கம், 06.11.1960)

● பாரத் ஸ்ரீமன் அழகேசன் ●

கலகக்காரர் தலைவர் 08



■ எழுத்து: **மகிழவன்**, ஏ.ஐ. உருவாக்கம்: **ஆரிஃப் முகம்மது**

ஃப்ளாஷ்பேக்



எஸ்.ஏ.உதயசூரியன்

தலைவர் அணிவித்த கணையாழி!



2009-ஆம் ஆண்டு, திருத்தங்கல் நகராட்சியில், அப்போ தைய 5-வது வார்டு இடைத்தேர்தலில், அ.தி.மு.க. வசம் இருந்த வார்டில், கழகத் தம்பி இரவியை நிற்கவைத்து, அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்தோம். அதைப் பாராட்டி, அப்போதைய தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழகத் தலைவர், அண்ணன் தளபதியார் அவர்களின் திருக்கரங்களால் எனக்கு கணையாழி அணிவித்து வாழ்த்துகள் தெரிவித்தார். அண்ணன் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன் உடனிருந்தார். அந்த இனிமையான தருணத்தின் நினைவுதான் இந்தப் படம்.

– **எஸ்.ஏ.உதயசூரியன்,**
மாநகரச் செயலாளர், சிவகாசி.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

தெரிந்து கொள்வோம்

1963

இந்தி எதிர்ப்பு வாரம்!

-ஆம் ஆண்டு ஜூலை 15-ஆம் தேதி, கழகத்தின் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு, பேரறிஞர் அண்ணா பிறந்தநாளான செப்டம்பர் 15-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை இந்தி எதிர்ப்பு வாரமாகக் கடைப்பிடிக்க, கழகத்தின் அமைப்புகளைக் கேட்டுக்கொண்டது. 1938-ஆம் ஆண்டு முதலே இந்தி எதிர்ப்பில் தீவிரம் காட்டிய அண்ணாவின் பிறந்தநாள், இந்தி எதிர்ப்பு எழுச்சி நாளாக வரலாற்றில் இடம்பெற வேண்டும் என அந்தக் குழு கூறியது. அந்த முடிவை அண்ணா ஏற்றுக்கொண்டாலும், ஒரு வாரத்துக்கு மட்டும் எதிர்ப்பைக் காட்டிவிட்டு ஓய்ந்துவிடலாகாது என கழகத்தினருக்கு அறிவுறுத்தினார்.



Published and Printed by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034
Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Ph: 044 - 45849900